# செப்டம்பர் – 04 – செவ்வாய்

**புனித ரோஸ் பீற்றர் லியோ**

**“தூய ஆவியாரே அனைத்தையும் துருவி ஆய்கிறார்” – 1 கொரி 2:10**

## முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 2 : 10 – 16

சகோதர சகோதரிகளே! தூய ஆவியாரே அனைத்தையும் துருவி ஆய்கிறார். கடவுளின் ஆழ்ந்த எண்ணங்களையும் அறிகிறார். மனிதரின் உள்ளத்திலிருப்பதை அவருள்ளிருக்கும் மனமேயன்றி வேறு எவரும் அறியமுடியாது அன்றோ! அவ்வாறே, கடவுள் உள்ளத்திலிருப்பதை அவர் தம் ஆவியே அன்றி வேறு எவரும் அறியார். ஆனால், நாம் இவ்வுலக மனப்பாங்கைப் பெற்றுக் கொள்ளவில்லை. மாறாக, தூய ஆவியைக் கடவுளிடமிருந்து பெற்றுள்ளோம். இவ்வாறு கடவுள் நமக்கு அருளிய கொடைகளைக் கண்டுணர்ந்து கொள்ளுகிறோம். ஆவிக்குரிய வர்களுக்கு ஆவிக்குரியவற்றைப்பற்றி விளக்கிக் கூறும்போது நாங்கள் மனித ஞானத்தால் கற்றுக்கொண்ட சொற்களைப் பேசுவதில்லை. மாறாக, தூய ஆவியார் கற்றுத்தரும் சொற்களையே பேசுகிறோம். மனித இயல்பை மட்டும் உடைய ஒருவர் கடவுளின் ஆவிக்குரியவற்றை ஏற்றுக்கொள்வதில்லை. அவை அவருக்கு மடமையாய்த் தோன்றும். அவற்றை அவரால் அறிந்துகொள்ளவும் முடியாது. ஏனெனில் அவற்றைத் தூய ஆவியின் துணைகொண்டே ஆய்ந்துணர முடியும். ஆவிக்குரிய வரோ அனைத்தையும் ஆய்ந்துணர்வார். எவரும் அவரை ஆய்வுக்கு உட்படுத்த முடியாது. "ஆண்டவருடைய மனத்தை அறிபவர் யார்? அவருக்கு அறிவுரை கூறுபவர் யார்?" நாமோ கிறிஸ்துவின் மனத்தைக் கொண்டுள்ளோம்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தாம் செய்யும் அனைத்திலும்
நீதியுடையவர்.

## நற்செய்தி : லூக்கா 4 : 31 – 37

அக்காலத்தில இயேசு கலிலேயாவிலுள்ள கப்பர்நாகும் ஊருக்குச் சென்று, ஓய்வு நாள்களில் மக்களுக்குக் கற்பித்து வந்தார். அவருடைய போதனையைக் குறித்து அவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். ஏனெனில் அவர் அதிகாரத்தோடு கற்பித்தார். தொழுகைக் கூடத்தில் தீய ஆவியான பேய் பிடித்திருந்த ஒருவர் இருந்தார். அவரைப் பிடித்திருந்த பேய், "ஐயோ! நாசரேத்து இயேசுவே, உமக்கு இங்கு என்னவேலை? எங்களை ஒழித்துவிடவா வந்தீர்? நீர் யார் என எனக்குத்தெரியும். நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்" என்று உரத்தகுரலில் கத்தியது. "வாயை மூடு, இவரை விட்டு வெளியே போ" என்று இயேசு அதனை அதட்டினார். அப்பொழுது பேய் பிடித்தவரை அவர்கள் நடுவே விழச்செய்து, அவருக்கு ஒரு தீங்கும் இழைக்காமல் பேய் அவரைவிட்டு வெளியேறிற்று. எல்லாரும் திகைப்படைந்து, "எப்படிப் பேசுகிறார், பாருங்கள்! அதிகாரத்தோடும் வல்லமையோடும் தீய ஆவிகளுக்குக் கட்டளையிடுகிறார் அவையும் போய்விடு கின்றனவே!" என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டனர். அவரைப்பற்றிய பேச்சு சுற்றுப்புறமெங்கும் பரவியது.

**தியானம்:** எல்லாம் வல்ல மூவொரு கடவுளின் கருணைக்கு அளவும், எல்லையும் இல்லை. அடித்தலைவிட அரவணைத்தலே அவரது இயல்பாகும். அவர் கனிவு காட்டுவதில் நல்லார், பொல்லார் என்று வேற்றுமை பாராட்டுவதும் இல்லை. அவரது வாக்கைக்கேட்டு மனம்மாறும் அனைவருக்கும் மன்னிப்பு அருள்கிறார். பாவிகளின் அழிவை அல்ல, மனமாற்றத்தையே அவர் விரும்புகின்றார் என்பதனை நற்செய்தி (லூக்கா 4:31–37) தெரிவிக்கிறது. ஆண்டவர் இயேசுவின் பெயரால் திருமுழுக்குப்பெற்ற கத்தோலிக்கரான எம்மிடையே அதிகாரம் கொண்ட போதனைகள் தேவை. இயேசுவிடம் காணப்பட்ட பணிசெய்யும், சுதந்திர உணர்வோடு செயல்படும் அதிகாரம் போதிப்போரிடமும், பொறுப்பிலுள்ளோரிடமும் மிக அவசியம். அவையே சமூக மாற்றத்தை ஏற்படுத்தும். ‘‘இயேசு தொழுகைக் கூடத்திற்குச் சென்று அதிகாரத்தோடு போதித்தார். அவருடைய போதனையைக் குறித்து மக்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். அவர்களுடைய தொழுகைக் கூடத்தில் தீய ஆவி பிடித்த ஒருவர் ‘‘நாசரேத்து இயேசுவே, உமக்கு இங்கு என்னவேலை? எங்களை ஒழித்து விடவா வந்தீர்? நீர் யார் என எனக்குத்தெரியும் நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்’’ என்று கத்தியது. ‘‘வாயை மூடு! இவரை விட்டு வெளியேபோ’’ என்று இயேசு அதட்டினார். அப்பொழுது அத்தீய ஆவி அம்மனிதருக்கு வலிப்பு உண்டாக்கி பெரும் கூச்சலிட்டு அவரை விட்டு வெளியேறியது. கூடியிருந்தவர்கள், ‘‘இது என்ன? அதிகாரம் கொண்ட போதனையாக இருக்கிறதே! இவர் தீய ஆவிக்குக் கட்டளையிடுகிறார் அதுவும் இவருக்குக் கீழ்ப்படிகின்றதே என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.’’ என நற்செய்தி (மாற்கு 1: 21-28) தெரிவிக்கிறது. நேர்மையும், உண்மையும் உள்ளவர்களின் பேச்சு வல்லமை கொண்டதாகவே இருக்கும் என்பதற்கு கிறிஸ்துவின் வாழ்வும் அவரது போதனையும் மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. நம்முடைய பேச்சு “ஆம்” என்றால் “ஆம்” என்றும் “இல்லை” யென்றால் “இல்லை” யென்றும் இருக்கவேண்டும். சொன்னவர் வார்த்தையில் வல்லமை வேண்டும் என்றால், பேச்சிலே சொதப்பல் இல்லாமல் இருந்தாலே வல்லமை கொண்டதாக இருக்க முடியும். எனவே, இயேசுவின் சீடர்களாகிய நாம் இயேசுவுக்கு இருக்கும் வல்லமையை உணர்ந்து, நாமும் அவரிடமிருந்து பெற்ற வல்லமையின் வழியாக சமூகத்தில் இருக்கும் பல்வேறுபட்ட “சொதப்பல் பேய்களை” விரட்டி அடிப்போம். இறைவனுக்கு உகந்த நல்ல வாழ்க்கை வாழ்வோம். அதன்வழியாக இறையருள் பெறுவோம்